LIBRARY
6 DEC 1963
LEGISLATURE, MADRAS

THE MADRAS LEGISLATIVE ASSEMBLY

Monday, 25th March 1963.

The House met in the Assembly Chamber, Fort St. George, Madras, at half-past eight of the clock, Mr. Speaker (The Hon. Sri S. CHELLAPANDIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTIONS.

ஹோமியோபதி மருத்துவம்

* 343 **கேள்வி.—திரு. எஸ். முருகையன் (திரு. இராம. அரங்கண்ணல் சார்பாக)**: கனம் சுகாதார அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா ?

ஹோமியோபதி மருத்துவ முறை வளர்ச்சிக்கு அரசாங்கம் அளித்து வரும் சலுகைகள் யாவை ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: தற்பொழுது சலுகைகள் ஒன்றுமில்லை.

* 344 *Q*.—Sri V. S. S. MANI : Will the Hon. the Minister for Public Health be pleased to state—

(*a*) whether there is any proposal to open a college for Homoeopathic system of medicine with a hospital attached; and

(*b*) if so, when and where?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: அமெரிக்கா போன்ற இடங்களில்கூட ஹோமியோபதிக்கு கல்லூரிகள் இருப்பதாகச் சொல்கிறார்கள். ஹோமியோபதி முறைக்கு ஊக்கம் அளிக்க நமது மாநிலத்திலும்கூட ஒரு ஹோமியோபதி கல்லூரியை ஏற்படுத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

கனம் திருமதி ஜோதி வெங்கடாசலம்: சார், கல்லூரி முறையிலே ஹோமியோபதி வைத்தியத்தைக் கற்பிப்பதற்காக வேண்டி ஏற்கனவே நான் சொன்னதுபோல் ஒரு பில் லா டிப்பார்ட்மெண்டில் இருக்கிறது. அது டிராப்ட் ஆகி ஆக்ட் ஆக பாஸான பிறகு இதைப் பற்றி ஆலோசிக்கலாம்.

Family Planning

* 348 *Q*.—Sri S. MADHAVAN : Will the Hon. the Minister for Public Health be pleased to state whether there is any proposal to divert the funds allotted for the family planning programme towards defence expenditure in view of the present emergency?

The Hon. Srimathi JOTHI VENCATACHELLUM : No.